
TAMIL - *"Who will deliver me?"*

# யார் என்னை விடுதலை செய்யக்கூடும் ?

பசோத்லாந்து நகர அதிபதிக்கு சொந்தமான ஓர் கிராமத்தில் குறிப்பிட்ட ஓர் ஞாயிற்றுக் கிழமையில் அற்புதமான சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். கர்த்தருடைய வசனத்தை கேட்கும்படி அதிபதியும், அவருடைய மனைவியாரும் உட்பட பெரியதோர் கூட்டம் குழுமியிருந்தது. ஜீவனும், வல்லமையுள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயுமுள்ள வேத வசனமானது மக்களின் இதயங்களை ஊடுறுவிப்பாய்ந்தது.

## என்னை யார் விடுதலை செய்வார்கள் ?



நான் பேசிக்கொண்டிருக்கையில் மகா அதிபதியின் மனைவியாகிய அரசி மனம் கசந்து அழத்தொடங்கினாள். கண்ணீர் தாரை தாரையாய் வடிய அவள் எழுந்து நின்று "யார் என்னை விடுதலையாக்குவார்? எனக்கு உதவி செய்யுங்கள், என் இதயம் சஞ்சலப்படுகின்றது, நான் மிகவும் நிர்பாக்கியமானவள். இப்பயங்கர பாவக்கட்டில் இருந்து என்னை யார் விடுதலை செய்வார்கள்? ஐயோ! நான் என்ன செய்ய வேண்டும்? உங்கள் எல்லோருக்கும் தெரிந்தவண்ணம் நான் அதிபதியின் மனைவியும் ஜெபிக்கும் ஓர் மாதுவாகவும் இருந்தேன்.

இருபது ஆண்டுகளுக்கு அதிகமாக ஆலயத்திற்குச் சென்றேன். இவைகள் எல்லாம் எனக்கு உதவி செய்யவில்லை. அவைகளால் விடுவிக்கக் கூடாத அளவில் பாவம் என்னைக் கட்டி வைத்திருக்கிறது. நானே குடிகாரியாகவும், கொலைகாரியாகவும், இருக்கின்றேன். என் கரங்களோ அசுத்தமானவைகளும் பொல்லாதவைகளுமாய் இருக்கின்றன. ஏனெனில் மனிதனை நாசமாக்கும் சபிக்கப்பட்ட மதுபானத்தை அவைகள் உண்டுபண்ணிற்றே! ஐயோ! என் சரீரம் முழுவதையும்

பாவம் ஆட்கொண்டிருக்கிறது. நான் நரகத்தின் கைதி!" எனக் கதறினாள்.

மறுபடியுமாக அவள் அதிக வியாகுலத்துடன் கதறி இருக்கையில் அமர்ந்து,"எனக்கு உதவிசெய்யுங்கள்! யார் என்னை விடுதலை செய்வார்கள்? பாவத்தின் சங்கிலியில் இருந்து யார் என்னை விடுவிப்பார்கள்? நான் தேவனை நேசிக்கிறேன். ஆனால் பாவம் என்னை ஆளுகின்றது. பாவம் என்னை நரகத்தை நோக்கி இழுக்கின்றது. ஒரு நாள் நான் அதிகமாய் குடித்துவிட்டு சுயநினைவு அற்றவளாய் கீழே விழுந்து அதிகமாக புரண்டபோது நான் என்மேல் சுமந்து வந்த முதற்பேரான பச்சிளங்குழந்தை தலை நொறுங்கி இறந்தது. ஐயோ! தயவு செய்து என்னை இந்த பாவமரணத்தின் பிடியிலிருந்து விடுவியுங்கள். என் மதமும், பக்தியும் என்னை விடுவிக்கவில்லை. யார் என்னை விடுதலை செய்வார்" என்று கூக்குரலிட்டாள்.

அவளுக்கு நான் பிரதியுத்தரமாக, "உனக்கு சமாதானம் உண்டாவதாக! கலங்காதே! உன் கலக்கம் எல்லோருடையதுமாய் இருக்கின்றது. தேவனுடைய வார்த்தை (வேதாகமம்) உன் இதய அலறலுக்கு பதிலளிக்கின்றது. (ரோமர் 7:15-25). இவ்வசனங்களில் பாவம் நம்மை ஆளுகிறதென்றும், நம்மை இரட்சிக்கக்கூடிய ஒரு நபரை பற்றியும் கூறப்பட்டிருக்கின்றது.

"அதென்னவெனில் என்னிடத்தில் அதாவது என் மாமிசத்தில் நன்மை வாசமாயிருப்பதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்யவேண்டும் என்னும் அவா என்னிடத்தில் உண்டு; நன்மை செய்வதோஎன்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையை செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன். எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணங்களுக்கு விரோதமாய் போரிடுகிற வேறொரு பிரமாணம் என் அவயவங்களுக்குள் உண்டு என்று காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னை சிறையாக்கிக் கொள்ளுகிறது." விரைவிலோ தாமதமாகவோ ஒவ்வொரு மனிதனுக்கும் இப்படிப்பட்ட இதயவேதனை உண்டாகத்தான் செய்யும். ஐயோ! நிர்ப்பந்தமான மனிதன் நான்!! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?".

இவ்வாறு முறையிடும் ஒரு ஆத்துமாவின் கதறலுக்குத் தேவன் பதிலளித்து விடுதலை கொடுக்க நீதியும் கிருபையும் உள்ளவராய் இருக்கிறார்.

**பதில்:** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். ரோ. 7:25. குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். யோ. 8:36.

நம்முடைய எல்லா கேள்விகளுக்கும் இயேசுவே பதிலாய் இருக்கிறார். "உம் வினாவின் விடை இயேசு." அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழே பூமியின் மேலே மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப். 4:12.

இயேசு மாத்திரமே நம் பாவங்களில் இருந்து நம்மை விடுவிப்ப வர். சிலுவையில் சிந்தப்பட்ட அவருடைய இரத்தம் மாத்திரமே நம் பாவங்களை கழுவக்கூடும். எந்த வைத்தியனாலும்; எந்த மருந்தினாலும்; எந்த மந்திரக்காரனாலும்; எந்த போதகனாலும்; எந்த பூசாரியாலும் மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்க முடியாது. உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு மாத்திரமே ஒரு மனிதனை தம் இரத்தத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் இரட்சிக்க முடியும்.

## இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனை துதிக்கிறேன்




## குமாரன் உங்களை விடுதலையாக்கினால் நீங்கள் மெய்யாகவே விடுதலை அடைவீர்கள்

"நீர் குருடருடைய கண்களை திறக்கவும், கட்டுண்டவர்களை காவலிலிருந்து விடுதலை செய்யவும், இருளில் இருக்கிறவர்களை சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கவும் தேவ குமாரனாகிய இயேசு இவ்வுலகத்தில் வந்தார். ஏசாயா 42:6,7. இயேசு கூறினார் பாவம் செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.

தேவகுமாரனாகிய இயேசு தாமே தம்முடைய சரீரத்தில் நம்முடைய எல்லா பாவங்களையும் சுமந்து சிலுவைக்கு சென்றார். உங்களுடைய பாவங்கள் யாவும் தேவகுமாரனின் சரீரத்தோடு சேர்த்து ஆணிகளால் அறையப்பட்டுவிட்டது. "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். ஏசாயா 53:4,5.

பரபாஸ் என்பவன் மகா பாவியும், கொலைகாரனும், மரண தண்டனை விதிக்கப்பட்டவனுமாய் இருந்தான். அவன் சிலுவையில் அறையப்பட வேண்டியவனாய் இருந்தும் இயேசு அவனுக்கு பதிலாக அவனுடைய சிலுவையை சுமந்து அவனுடைய இடத்தில் அவனுக்காய்

மரித்தார். தேவகுமாரனுகிய இயேசு, பரபாசுக்காக, ஒரு கள்ளனும், கொலைபாதகனுமானவனுக்காக மரித்தார். ஏன்? நீயும் நானும் கூட இன்று அந்த பரபாஸைப் போல் தான் இருக்கிறேம். ஆனுல் தேவனே எனக்காகவும், உனக்காகவும் பலியானுர்.

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுல் உண்டான நித்திய ஜீவன். விசுவாசத்துடன் நீ அந்த கோர சிலுவையை நோக்கிப்பார்ப்பாயானுல் உன்னுடைய பாவங்களும் நீயும் அந்தச் சிலுவையில் அறையப்பட்டிருப்பதைக் காண்பாய். இயேசு உனக்காய் உன் இடத்தில் மரித்தார், நீ என்றும் பிழைக்கும்படியாக! உன் பாவங்களின் பரிகாரத்திற்காக தன் இரத்தத்தை சிந்தினுர் இயேசு. தேவன் தம்முடைய ஒரே பேருன குமாரனை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு (இயேசுவை) அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

இவைகளையெல்லாம் அந்த அதிபதியின் மனைவி கேட்டபின் அவள் இயேசுவை முழுவதுமாய் நம்பி தனக்காய் சிலுவையில் ஜீவனை கொடுத்த இயேசுவுக்கு தன் இதயத்தைக் கொடுத்தாள். அவள் தன் பாவம் நிறைந்த இதயத்தை இயேசுவுக்கு கொடுத்தாள். அவரோ அவளுக்கு பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தினுல் நிறைக்கப்பட்டதோர் புது இதயத்தைக் கொடுத்தார். இயேசு அவளுடைய பாவங்களுக்கு மன்னிப்பை அருளியது மட்டுமல்லாது அவளுக்கு பாவத்தின் ஆளுகையினின்றும், பாவ வல்லமையினின்றும் விடுதலை தந்தார். அன்று முதல் எத்தனையோ வருடங்கள் அவள் அழகிய புனிதமானதோர் வெற்றி வாழ்க்கை வாழ்ந்தாள். அன்று முதல் அவள் எந்தவகை மதுபானங்களையும் அவள் அருந்தியதில்லை, புகைபிடிப்பதில்லை. பழைய பாவ வாழ்க்கை அவளை விட்டு முற்றிலும் அகன்றது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிருன். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. 2 கொரி. 5:17.

இதை வாசிக்கும் அன்பான நண்பனே! நீயும் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து விடுதலை அடைவாயாக. “வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்”. என்று இயேசு மொழிந்தார். இப்பொழுதே, எந்த நிலையில் நீ இருந்தாலும் இயேசுவண்டை வா! அவரிடம் உன் பாவபிரச்சனையைக் கூறு. நீ தாழ்ந்த ஆத்துமாவோடும் விசுவாசத்தோடும் வந்தால் அவர் உன்னை புறக்கணிக்கமாட்டார். ஒருவேளை நீ அதிக நாட்களாக கிறிஸ்தவனுய் இருக்கலாம். இயேசுவண்டை வா! குஷ்டரோகியையும், குருடனையும் சுகமாக்கினது போல் உன்னையும் விடுவிப்பார். இயேசு இன்றும் மாருதவராய், இந்த இருபதாம் நூற்றுண்டிலும் கூட உன்னை சுகப்படுத்த, பாவத்திலிருந்து விடுவிக்க வல்லவராய் இருக்கிருர். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

எங்களுக்கும் உங்களுடன் தொடர்பு கொள்ள ஆவல் உண்டு. மேலும் அறிய விரும்பினுல் எங்களுக்கு எழுதுங்கள். **J. R. Gschwend,**

---

For **free** Gospel literature, books and tracts in over 540 languages, write to: **E-MAIL: info@angp.co.za**

**ALL NATIONS GOSPEL PUBLISHERS**

**P.O. Box 2191, PRETORIA, 0001, R.S.A.**

(A Gospel Literature Mission financed by donations)

(Reg. No. 1961/001798/08)